# அருஞ்சொற்பொருள்

## அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| அங்காசலை | - | நடனசாலை; சுதந்திர மற்றும் மேரையாக வழங்கப்படும் ஒரு பங்கு, கிராமப் பணியாளர்களுக்குரிய பங்கு |
| அமல்தாரர் | - | வரி வசூலிப்பவர் |
| அமேஷா | - | எப்பொழுதும், வழக்கமாக |
| அயின்மேல்வார | - | அரசுக்கு சேரவேண்டியதாக தீர்மானியக்கப்பட்ட தீர்வை |
| அர்க்கான் | - | கோயில் மேற்பார்வையாளன் |
| அர்த்தமானியம் | - | பாதி மானியம், மேல்வாரப்பாதியிலிருந்து பெறும் மானியம் |
| அறிதிக்கடன் | - | அரசுக்கு சேரவேண்டிய மொத்தக் கட்டணம் அல்லது கடம் |
| இறைப்பு | - | நீர் இறைத்தல் |
| உடவாரம் | - | மொத்த மகசூல் |
| உப்புத்தடம் | - | உவர்நிலம் |
| எக்கல்மேடு | - | மணல்மேடு |
| எருகால் தத்தி | - | எருங்குழி |
| எல்லைத்தரிசு | - | சாகுபடி செய்யப்படாத நிலம் |
| ஏரி அளவு | - | ஏரி மராமத்து செய்யப்படவேண்டியது பற்றியும், அதன்மூலம் கிடைக்கும் வருவாய் பற்றிக் கூறும் கணக்கு |
| ஏரிமேரை | - | ஏரிபராமரிப்புக்கென மேரையாக ஒதுக்கப்படும் பங்கு |
| கங்காணம் | - | மேற்பார்வையிடுதல்; மசூதிப் போன்றவற்றைப் பார்வையிடுவதற்காக வழங்கப்படும் மேரை |

| | | |
|---|---|---|
| கசுப்பா | - | தலைநகரம், முக்கியநகரம். |
| கடனாதாயம் | - | |
| கண்டிகை | - | காணியாட்சி போன்றதொரு உரிமை |
| கணக்கு அடுகு | - | ரொக்க ஆதாயமாகப் பெறப்படும் வரி |
| கந்தாயம் | - | வெற்றிலைத் தோட்டக்காரரிடமிருந்து வசூலிக்கப்படும் ரொக்காதாயம் |
| கம்பத்தம் | - | சொந்த விவசாயம், கோயில் விவசாயம் |
| கம்புகட்டி | - | ஏரி நீர்ப்பாய்ச்சுவோன் |
| கயம் | - | நீர்நிலை, அகழி |
| கரம்பு | - | விளைச்சலுக்குட்படாத நிலம் |
| கல்மேடு | - | கல்திட்டு |
| கல்லாங்குத்து | - | பாறைநிலம் |
| களம் | - | 96படிகள் கொண்ட அளவு |
| கலிங்கல் | - | ஏரிமதகு |
| கவிலாச்சாரம் | - | குத்தகை உடன்படிக்கைப்படி |
| கழிவெளி | - | களர் வெளி |
| களத்துமேடு | - | நெற்களம் |
| களர் | - | உவர்நிலம் |
| காசு | - | நாணய வகை |
| காணி | - | 100 குழி கொண்ட நில அளவு |
| காணியாட்சிக்காரர் | - | குடி உரிமையைப்பெற்றோர் |
| கானுக்கோயி | - | நிலவரிப்பதிவு அலுவலர் |
| கிராமநத்தம் | - | குடியிருப்புப்பகுதி |
| குடியில்லா மனை | - | காலி மனை |
| குடிவாரம் | - | பயிரிடும், குடிகளைச் சேரும் மகசூலின் பங்கு |
| குடுமி, விஷதாரி | - | பாம்பாட்டி, விஷ வைத்தியர் |
| குப்பத்தம் | - | கிராம மிராசுதாரருக்கு வழங்கப்படும் சுதந்திரப் பங்கு |
| குப்பம் | - | சுதந்திரத் திட்டத்தின் கீழ் கிராம மிராசுகளுக்கு வழங்கப்படும் பங்கு |
| குழி | - | நில அளவை 24 x 24அடி |
| கூத்தாடி | - | கிராம தெய்வத்தின் ம்ன் நடனமாடுபவர் |
| கையேற்பு | - | சுதந்திரத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பங்கு |
| கொட்டாரமேடு | - | தானியக் களஞ்சியம், நெல் குத்துமிடம் |
| சம்பா | - | நெல்வகை |
| சமை மானியம் | - | மேரை மற்றும் சுதந்திரமாக வழங்கப்படும் பங்கு |

| | | |
|---|---|---|
| சர்வ மானியம் | - | மேல்வாரம் மற்றும் குடிவாரம் இரண்டையும் பெறும் உரிமை |
| சராப்பு | - | நாணய தோட்டம் பார்ப்பவர் |
| சவுத்தாயி தானியம் | - | நான்கில் ஒரு பங்கு மேரையாக வழங்கப்படும் மானியம் |
| சன்னது மானியம் | - | அரசு வரி நீக்கிய உத்தரவுடன் வழங்கப்படும் மானியம் |
| சாதல்வார் | - | சில்லரைச் செலவு |
| சாவடி | - | தங்குமிடம் |
| சிக்குடையார் | - | காஞ்சிக்காமக்கோடி பீடத்ததைச் சேர்ந்த கும்பகோணம் சிக்குடையார் |
| சீர்கணக்கர் | - | சீர்கர்ணம், கணக்கப்பிள்ளை |
| சீர்மை, சீமை | - | நாட்டுப்பிரிவு, மாவட்டம் |
| சுகவாசிகள் | - | குடிகள் |
| சுதந்திரத்திட்டம் | - | மொத்த விளைச்சலிலிருந்து, சூட்டடிப்பின் போது, களம் அளப்பதற்கு முன்பாகவும் சுதந்திரமாக பங்கு வழங்கும் திட்டம் |
| சுதந்திரம் | - | குறிப்பிட்ட உரிமையைப் பெறுதல் |
| சுரோத்திரியம் | - | சர்வமானியம் |
| சூடு; சூடு திட்டம் | - | விளைச்சலிலிருந்து கதிர் அறுக்கும்பொழுது சுதந்திரத்திட்டத்தின் கீழ் வழங்கும் பங்கு |
| செட்டி மாதவரி | - | செட்டிகளிடமிருந்து ரொக்கமாக வசூலிக்கப்படும் வரி |
| செய்கால் | - | விளைச்சலுக்குட்படுத்தப்பட்ட நிலம் |
| சோனகர் | - | முகம்மதியரில் ஒரு பிரிவினர் |
| தத்தி | - | செய்கால் நிலம், களிமண் நிலம் |
| தப்ரீக் | - | குடிக்கடன் |
| தரப்படி | - | தரவாரி நிலப்பிரிப்பு |
| தலைமடக்கு | - | சுதந்திரத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு பங்கு |
| தஸ்தூரி | - | ஒருவகைத் தரகு |
| தாங்கல் | - | சிறு ஏரி |
| திட்டு | - | மேடு |
| திருவலகு | - | கோயில் மற்றும் குளம் சுத்தம் செய்யும் பணியாளர் |
| தீர்வை | - | வரித்திட்டம் |
| தீவானம் | - | அரசு |
| தும்பல் | - | அரசு வரி நீக்கிய மானிய நிலம் |

| | | |
|---|---|---|
| தூக்கிரி | - | கிராமக் காவல்கார் |
| தேசமுகி | - | அரசிறை அதிகாரி |
| தொரவு | - | கிணறு |
| தொழுவம் | - | மாட்டுக் கொட்டில் |
| தோரண தெரிசன | - | குடிகளிடமிருந்து ரொக்கமாகப் பெறப்படும் வரி |
| தோவத்திர | - | மேல்வாரப்பங்குடன் சேர்க்கப்பெறும் ஒரு வகை மேரை |
| நடவாலி | - | படிகளமைந்த கிணறு |
| நாகசரம் | - | நாதஸ்வரம் |
| நாராசம் | - | குறுக்குத்தெரு |
| நிவந்தக்காரர் | - | கோயிர்பணியாளர் |
| பக்கிரி | - | முகம்மதியப் பரதேசி |
| பஞ்சாங்கம் | - | பஞ்சாங்க பிராமணர் |
| பஞ்சுகொட்டி | - | பஞ்சு சுத்தம் செய்பவன் |
| பாகவதர் | - | இசைச் சொற்பொழிவாளர் |
| பாட்டகன் | - | கோயில் பாடகன் |
| பாட்டை | - | வழி, சாலை |
| படி | - | முகத்தலளவை |
| படியாள் | - | பண்ணை ஆள் |
| பணம் | - | 80காசுகள் கொண்ட நாணய வகை |
| பணிசவன் | - | கிராம ஊழியன் |
| பழமானியம் | - | கிராம மிராசு மற்றும் கிராம நிர்வாகத்துடன் தொடர்பு உடையோருக்கு நீண்டகாலமாக வழங்கப்பட்டுவரும் மானியம் |
| பாச்சல் | - | நிலத்திற்கு நீர்ப் பாய்ச்சுதல், நீர்ப்பாசனம் பெறும் நிலம் |
| பாளையக்காரர் | - | காவற்படைத்தலைவர் |
| பிராமணவாஸ்து | - | பிராமணர் வசிக்குமிடம் |
| பிழக்கடை | - | வீட்டின் பின்புறம் |
| புழக்கடை | - | வீட்டின் பின்புறம் |
| புஷ்கரணி | - | புதிதாக வழங்கப்படும் மானியம் |
| பூரிகை | - | பூக்கள் நிறைந்த குளம் |
| பேரிசு | - | வருவாய் |
| பொந்திலியர் | - | |

| | | |
|---|---|---|
| பொலிப்பாட்டு | - | களத்தில் சூட்டடிப்பின் போது பாடப்பெறும் பாட்டு; விளைச்சலில் பொலிப்பாட்டிற்கென ஒதுக்கப்படும் பங்கு |
| மகசூல் | - | மொத்த விளைச்சல் |
| மசானம் | - | மயானம், சுடுகாடு |
| மடவளாகம் | - | கோயிலைச் சுற்றி அமைந்திருக்கும் குடியிருப்புப் பகுதி |
| மடு | - | பள்ளம்; ஏரியிலிருந்து கொண்டுவந்த நீரைத் தேக்கிவைக்கப்படும் இடம் |
| மத்துவரி | - | நெய்காரர் கொடுக்கும் ரொக்கவரி |
| மந்தவெளி | - | மேய்ச்சல் நிலம் |
| மரக்கால் | - | 8 படியளவு |
| மாகாணம் | - | வட்டம் |
| மானாவாரி | - | வானம் பார்த்த பூமி |
| மிராசுக்காரர், | - | குறிப்பிட்ட உரிமையைப் பெறுபவர்; மிராசுதாரர் |
| முகாபலா | - | கணக்குப்பதிவுகளை ஒத்துப்பார்த்தல் |
| மேரை | - | விளைச்சலிலிருந்து கிராம மிராசு மற்றும் பல்வேறு வகை நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் பங்கு |
| மேரைத்தோட்டம் | - | கிராம நிர்வாகத்துடன் தொடர்புடைய பணியாளர், அலுவலர் பல்வேறுவகை நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மேரைப் பற்றி கூறும் கணக்கு |
| மேல் வாரம் | - | மொத்த மகசூலிலிருந்து அரசுக்கு கிடைக்கும் பங்கு |
| மேல்வாரப்பாதி | - | மேல்வாரப் பாதியிலிருந்து மானியமாகப் பெறப்படும் பங்கு மானியம் |
| மேங்காவல் | - | அரசுக்காவல், தேசக்காவல் |
| ருத்திரபூமி | - | மயானபூமி |
| ரொக்காதாயம் | - | அரசுக்கு ரொக்கமாகக் கிடைக்கும் வருவாய் |
| வம்பர் | - | மணல்வெளி |
| வயணம் | - | விவரம், விரிவான தகவல்கள் |
| வராகன் | - | 36பணம் அல்லது 2880காசுகள் கொண்டது ஒரு வராகன் |
| வாரச்சட்டம் | - | மொத்தவிளைச்சலும் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் குடிவாரம், மேல்வாரம் பிரிக்கப்படுவதுபற்றிக் கூறும் கணக்கு |
| வாரப்பற்று | - | தானியமாக பெறப்படும் ஆதாயம் |

| | | |
|---|---|---|
| வெட்டி | - | கிராமப் பணியாளர் |
| விகிதம் | - | ஒருவகை வரி |
| விழல் | - | பயனற்றநிலம் |